தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

வளாகக் கல்வி தேர்வுப் பிரிவு

முனைவர் த. கண்ணன்

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ.)

ந.க.எண். தே1/2533/2020 நாள் : 28.07.2020

பொருள் : இணையதள வழி முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வுகள் நடத்துதல் - தொடர்பாக.

பார்வை : 1) புலத்தலைவர்கள் கூட்ட முடிவுகள் நாள்: 23.06.2020.

2) ஆய்வுக்குழுக் கூட்ட முடிவு நாள் : 14.07.2020.

3) துணைவேந்தரவர்களின் ஆணை நாள் : 27.07.2020.

-----

பார்வையில் கண்டுள்ள மாண்பமை துணைவேந்தரவர்களின் ஆணையின்படி கொரோனா தீநுண்மிப் பரவலாக்கத்தடுப்பு மற்றும் ஆசிரியர், மாணவர்களின் நலன் கருதி, தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்டப் பொதுவாய்மொழித் தேர்வை இணையவழியில் நடத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, முனைவர் பட்ட பொது வாய்மொழித் தேர்வுக் கூட்டுநர்கள் மற்றும் புறத்தேர்வாளர்கள் முனைவர் பட்டப் பொது வாய்மொழித் தேர்வை இணையவழியில் உரிய நெறிமுறைகளின் அடிப்படையில் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

28/07/2020

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ.)

இணைப்பு : முனைவர் பட்டப் பொது வாய்மொழித் தேர்வுகளை இணைய வழியில் நடத்துவதற்கான நெறிமுறைகள்.

பெறுநர் : அனைத்து கல்வியாளர்கள்

நகல் : 1) துணைவேந்தரவர்கள் செயலகம்

2) பதிவாளர் செயலகம்

## முனைவர் பட்டப் பொது வாய்மொழித் தேர்வுகளை இணைய வழியில் நடத்துவதற்கான நெறிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்டப் பொது வாய்மொழித் தேர்வுகள் பல்கலைக்கழக மானியக்குழுவின் நெறிமுறைகள் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக விதிமுறைகளின் அடிப்படையில் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போதைய சூழ்நிலையில் பரவிவரும் கொரானாப் பெருந்தொற்றுப் பரவலாக்கத் தடுப்பைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி மாண்பமை துணைவேந்தர் அவர்களின் ஆணையின்படி இணையவழியில் நடைபெறவுள்ள முனைவர் பட்டப் பொதுவாய்மொழித் தேர்வுகளுக்கான கூடுதல் நெறிமுறைகள் கீழ்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

1) வாய்மொழித் தேர்விற்கு முன்பாக ஆய்வேடு நூலகத்தில் பார்வைக்கு வைக்கப்படும். தற்பொழுது ஆய்வேட்டைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வைக்கு வைப்பத்துடன் முன்பு அளித்துள்ள ஆய்வுச் சுருக்கத்தையும் மென்படிவமாகத்(Pdf) தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்ற வேண்டும்.
2) வாய்மொழித் தேர்விற்கான அறிவிப்பில் இணையவழிப் பங்கேற்பதற்கான இணைப்பு முகவரி(Web link), கடவுச்சொல் (Password), பின்னூட்டப் படிவம் (Feedback Form) என்பனவற்றைத் தவறாது குறிப்பிட வேண்டும்.
3) இணைய இணைப்பை முன்னதாகச் சரிபார்த்தலும் இணையவழியான நடைமுறைகளைக் கூட்டுநர், புறத்தேர்வாளர், ஆய்வு மாணவருடன் வாய்மொழித் தேர்விற்கு முன்னதாகப் பரிசோதனை செய்து பயிற்சி பெறுதலும் அவசியம்.
4) வாய்மொழித் தேர்வு அறிக்கையை வன்படிவமாக அளிக்கும்போது இணைய வழியில் நடைபெற்ற வாய்மொழித் தேர்வின் பதிவை மென்படிவமாகவும் அளிக்க வேண்டும்.

5) நூலகத்தில் ஆய்வேட்டைப் பார்வையிட்ட பார்வையாளர்கள் பட்டியலை அளிக்கும் போது இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆய்வுச் சுருக்கத்தைப் பார்வையிட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கை விவரங்களையும் அளிக்க வேண்டும்.

6) வாய்மொழித் தேர்வில் இணையவழிப் பங்கேற்ற பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை விவரங்களை அளிக்க வேண்டும்.

7) ஆய்வுச்சுருக்கத்தை இணையத்தில் பதிவேற்றுதல், ஆய்வுச் சுருக்கத்தைப் பார்வையிட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கை விவரங்களைப் பெறுதல், இணைய முகவரி, கடவுச் சொல், பின்னூட்டப்படிவம் முதலிய இணையம்சார் வழிமுறைகளுக்கு முனைவர் அ.பா. கார்த்திக்ஆனந்த் பாபு (ஒருங்கிணைப்பாளர், இணையவழிப் பொது வாய்மொழித் தேர்வுகள், உதவிப் பேராசிரியர், கணிப்பொறி அறிவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், அலைபேசி எண். 9443716281, மின்னஞ்சல் : karthickanandbabu.ab@gmail.com) அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

28/07/2020

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)